பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 61 நாள்: 05.06.2017

**சுற்றுப்புற சுகாதாரத்தினை மேம்படுத்திட பொதுமக்கள் மட்கும் மற்றும் மட்காத குப்பைகளாக பிரித்து வழங்கிட வேண்டும் என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தெரிவித்தார்**

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் இன்று (05.06.2017) அம்மா மாளிகையில் மாண்புமிகு மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் தின உறுதிமொழியினை ஏற்று, 25 துப்புரவு பணியாளர்களுக்கு தலா ரூ.24,360 மதிப்பீட்டில் மொத்தம் ரூ.6,09,000 மதிப்பிலான மூன்று சக்கர மிதிவண்டிகளையும், பொதுமக்களுக்கு மட்கும் மற்றும் மட்காத குப்பைகளை பிரிப்பதற்காக ரூ.16.20 இலட்சம் மதிப்பீட்டிலான 13,500 பச்சை மற்றும் 13,500 நீல நிறக் கூடைகளையும் வழங்கி, சுற்றுப்புற சுகாதாரத்தை மேம்படுத்திட பொதுமக்கள் தங்களது இல்லங்களிலேயே குப்பைகளை மட்கும் மற்றும் மட்காத குப்பைகளாக பிரித்து பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களிடம் வழங்கிட வேண்டும் என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தெரிவித்தார்.

விழாவில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் பேசுகையில் தெரிவிக்கையில்,

- இன்று உலக சுற்றுச்சூழல் தினம். ஐக்கியநாடுகள் சபையின் அறிவிப்பின்படி, 1974ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும், ஜுன் 5ம் தேதியன்று, உலக சுற்றுச் சூழல்தினம், உலகிலுள்ள 143 நாடுகளில், சிறப்பாக கொண்டாடப்பட்டுவருகிறது.
- இந்த நன்நாளில், சுற்றுப்புறச் சூழல்மாசுபடுதல், சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்படும் பாதகங்கள், மற்றும் புவிவெப்பமயமாதல் ஆகியவற்றை தடுப்பதையும், இவற்றால் ஏற்படும் விளைவுகளிலிருந்து பூமியினை பாதுகாப்பதையும் குறிக்கோளாகக் கொண்டு, நீடித்த நிலையான சுற்றுப்புறச் சூழலை உருவாக்கும் விதமாக, பல்வேறு விழிப்புணர்வு முகாம்களை நடத்த ஐக்கியநாடுகள்சபை அறிவுறுத்தியுள்ளது.

- மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஏழை எளிய மக்களின் நல்வாழ்விற்காக, இந்தியநாடேவியக்கும் வகையில், பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தினார்கள்.
- மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் பொருட்டு, திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களைசிறப்பாக செயல்படுத்தினார்கள்.
- மாண்புமிகு புரட்சித்தலைவிஅம்மாஅவர்களின் பொற்கால ஆட்சியில், கடந்த 5 ஆண்டு காலத்தில், 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள், 528 பேரூராட்சிகள் மற்றும் 12,524 ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள்,மற்றும் 31 மாவட்ட ஊராட்சிகள் உள்ளிட்ட ஊரகப்பகுதிகள், ஆகியவற்றில், மொத்தம் 1,807 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ஆனால் திமுக ஆட்சியில், 5 ஆண்டு காலத்தில், 303 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மட்டுமே, திடக்கழிவு மேலாண்மைப் பணிகள்மேற்கொள்ளப்பட்டன.
- திமுக ஆட்சிக் காலத்தை விட, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கு 1,504 கோடியே 40 இலட்சம் ரூபாய், அதிகமாக செலவிடப்பட்டு, மகத்தான சாதனை படைக்கப்பட்டது.
- பெருநகர சென்னை மாநகராட்சியில் நாளொன்றுக்கு 5,400 மெட்ரிக் டன் குப்பையும், இதர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 7,597 மெட்ரிக் டன் குப்பையும், பேரூராட்சிப் பகுதிகளில் 1,967 மெட்ரிக் டன் குப்பையும், ஊரகப் பகுதிகளில் 2,340 மெட்ரிக் டன் குப்பையும், எனதமிழகம் முழுவதும் மொத்தம் 17,304 மெட்ரிக் டன் குப்பைகள் தினசரி சேகரிக்கப்படுகின்றன.
- மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், முதற்கட்ட குப்பை சேகரிப்பு மற்றும் குப்பைகளை எடுத்துச் செல்லும் பணிகளுக்கு, வாகனங்கள் மற்றும் கொள்கலன்கள் வாங்குதல், மற்றும் உரக்கிடங்குகள் அமைத்தல், உயிரி எரிவாயுகலன்கள், குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் போன்ற பணிகளுக்கு, 1,515 கோடியே 19 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.
- மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஊரகப் பகுதிகளிலும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியுள்ளார்கள். 2014–15ஆம் ஆண்டில், 2,000 ஊராட்சிகளில் 110 கோடி ரூபாய்மதிப்பீட்டிலும், 2015–16ம் ஆண்டில், 7,000 ஊராட்சிகளில்300 கோடி ரூபாய்மதிப்பீட்டிலும், திடக்கழிவுமேலாண்மைதிட்டப் பணிகளைவிரிவுப்படுத்தினார்கள்.

- 2016–17ஆம் ஆண்டில், 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மீதமுள்ள 3,524 கிராம ஊராட்சிகளிலும் ‘தூய்மைகாவலர்களை’ ஈடுபடுத்தி திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், ஊராட்சிப் பகுதிகளில், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரிக்கவும், பிரிக்கவும், அவற்றை குப்பை கிடங்குகளுக்கு கொண்டு சேர்க்கும் பணிகளுக்காக, அனைத்து 12,524 கிராம ஊராட்சிகளிலும், 65,988 தூய்மை காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள் என்பதை, மிகவும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
- சேகரிக்கும் குப்பைகளை எளிதாக அப்புறப்படுத்தும் பொருட்டு, 22,704 மூன்று சக்கர மிதிவண்டிகள் மற்றும் தள்ளுவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.
- திடக்கழிவுகளைசேகரித்தல், பிரித்தல்மற்றும் அகற்றுதல் போன்ற பணிகளுக்காக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ், 65,988 பணியாளர்களை ‘தூய்மைக் காவலர்களாக’ தமிழ்நாடு அரசு தொடர்ந்து பயன்படுத்திவருகிறது.
- இந்த முயற்சியால், மாநிலத்தில் உள்ள அனைத்து 12,524 கிராம ஊராட்சிகளும், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை, மிகவும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
- மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின் படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலானஅரசு, மக்களின் அடிப்படைவசதிகளை மேம்படுத்திடவும், சுற்றுப்புறச் சுகாதாரத்தை மேம்படுத்திடவும், பல்வேறு திட்டங்களைத் தீட்டி, தொலை நோக்கு பார்வையுடன், சிறப்பாக செயல்பட்டுவருகிறது.
- இந்த சுற்றுப்புறச் சூழல்தினத்தன்று, தூய்மை இந்தியா திட்டம் மற்றும் தமிழ்நாடு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், தமிழகத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட 12 மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் இதுவரை 2,097 பணிகளுக்கு 969 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- திடக்கழிவுகளை கிடங்குகளில் கொட்டப்பட்டுவரும் நிலையை மாற்றி, சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கும் விதமாக, அறிவியல் ரீதியான முறைகளை கையாண்டு, திடக்கழிவுகளை உரம் மற்றும் எரிபொருள், மின்சாரம் போன்ற பயனுள்ள நிலைக்கு மாற்றும் விதமாக, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- பெருநகர சென்னை மாநகராட்சியில், மணலி மண்டலத்தில், 90 சதவீத வீடுகளிலிருந்து குப்பைகளை, மட்கும் மற்றும் மட்காத குப்பைகளாக பெறப்பட்டு, மட்கும் குப்பைகளிலிருந்து இயற்கை உரம் தயாரிக்கப்பட்டு, திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக மணலியை சேர்ந்த பொதுமக்களுக்கு, மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.
- மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில், புளியந்தோப்பு, ஓட்டேரி, வேலங்காடு, அத்திப்பட்டு ஆகிய நான்கு இடங்களில், குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் ஆலைகளும், குப்பையிலிருந்து இயற்கை எரிவாயு தயாரிக்கும் 2 நிலையங்களும் அமைக்கப்பட்டு, அம்மா உணவகங்களுக்கு பயன்படுத்தப்பட்டுவருகிறது. 141 இடங்களில், நாள் ஒன்றுக்கு 104 டன் மட்கும் குப்பையிலிருந்து, உரம் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.
- திருநெல்வேலி மாநகராட்சியில், தூய்மையான திருநெல்வேலி திடக்கழிவு மேலாண்மை திட்டம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- பல்லாவரம், தாம்பரம் மற்றும் 32 நகராட்சிகளில், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், குப்பைகளை மட்கும் குப்பை, மட்காத குப்பை என பிரித்து வாங்கி, மட்காத குப்பையின் மூலம் எரிவாயு உற்பத்தி செய்து, மின்சாரம் தயாரிக்கப்பட்டு வருகிறது.
- மொத்தமுள்ள 528 பேரூராட்சிகளில் 466 பேரூராட்சி பகுதிகளில் பொது மக்களிடமிருந்து நேரடியாக வீடுகளுக்கு சென்று மட்கும் குப்பை மட்காத குப்பை என பிரித்து வாங்கப்படுகிறது.
- மட்கும் குப்பை மூலம் இயற்கை உரம் தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது.
- மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாஅவர்களின் வழியில் செயல்படும், தமிழக அரசானது, திடக்கழிவுகளை பயனுள்ள நிலைக்கு மாற்றிட, அறிவியல் ரீதியான தொழில்நுட்ப கூடங்கள் அமைத்திட, தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வழிவகை செய்து, செயல்படுத்தி வருகிறது.
- தூய்மையான தமிழகத்தை உருவாக்கிட, பொதுமக்கள் அனைவரும் தங்கள் வீடுகளிலும், வணிகவளாகங்களிலும், உள்ளாட்சிபணியாளர்களிடம், குப்பைகளை மட்கும் குப்பைகள், மட்காத குப்பைகள் என பிரித்து வழங்கி, ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் எனகேட்டுக் கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர்.தா.கார்த்திகேயன் இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் (TUFIDCO) திரு.சந்திரகாந்த் பி.காம்ப்ளே, இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவன மேலாண்மை இயக்குநர் (TNUFSIL) திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையாளர் திரு.ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., மத்திய சென்னை பாராளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.விஜய குமார், வட சென்னை பாராளுமன்ற உறுப்பினர் திரு.டி.ஜி.வெங்கடேஷ் பாபு, தென் சென்னை பாராளுமன்ற உறுப்பினர் திரு.டி.ஜெ.ஜெயவர்தன், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வெற்றிவேல், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.விருகை வி.என்.ரவி, தியாகராயநகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.சத்திய நாரயணன், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.அலெக்ஸாண்டர், மைலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.நடராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**